## அலகு - 17

## தமிழ் மகளிரின் சிறப்பு

### 1. மூவலூர் ராமாமிர்தம்மாள்

**மூவலூர் இராமாமிர்தம் (1883 - 1962)**

தமிழகத்தின் சமூகச் சீர்திருத்தவாதி; எழுத்தாளர்; திராவிட இயக்க அரசியல் செயல்பாட்டாளர். ; தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேறத் துணைநின்றவர். தமிழக அரசு, 8ஆம் வகுப்புவரை படித்த இளம் பெண்களுக்கான திருமண உதவித் தொகையை இவரின் பெயரில் வழங்கிவருகிறது.

### 2. டாக்டர் முத்துலட்சுமி அம்மையார்

**முத்துலெட்சுமி (1886 - 1968)**

தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர்

இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர். சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயர். சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி.

தேவதாசிமுறை ஒழிப்புச் சட்டம், இருதார தடைச்சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் ஆகியவை நிறைவேறக் காரணமாக இருந்தவர். அடையாற்றில் 1930இல் அவ்வை இல்லம், 1952இல் புற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவியவர்.

### 3. வேலுநாச்சியார்

இராமநாதபுரத்தை ஆட்சி செய்த செல்லமுத்து மன்னரின் ஒரே மகள் வேலுநாச்சியார். தாய்மொழியாகிய தமிழ் மட்டும் அல்லாமல் ஆங்கிலம், பிரெஞ்சு, உருது ஆகிய மொழிகளையும் சிறப்பாகக் கற்றார். சிலம்பம், குதிரையேற்றம், வாட்போர், விற்பயிற்சி ஆகியவற்றையும் முறையாகக் கற்றுக் கொண்டார். சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரை மணந்து மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தார்.

காளையார்கோவிலில் நடைபெற்ற போரில் முத்துவடுகநாதர் ஆங்கிலேயரால் நயவஞ்சகமாகக் கொல்லப்பட்டார். வேலுநாச்சியார் ஆங்கிலேயரை வென்று சிவகங்கையை மீட்க உறுதி பூண்டார். திண்டுக்கல் கோட்டையில் தங்கி ஒரு படையைத் திரட்டிப் பயிற்சி அளித்தார்.

எட்டு ஆண்டுகளுக்குப் பின்…

திண்டுக்கல் கோட்டையில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. கூட்டத்தின் நடுவே வீரமங்கை வேலுநாச்சியார் அமர்ந்திருந்தார். அவரைச் சுற்றி அமைச்சர் தாண்டவராயர், தளபதிகளாகிய பெரிய மருது, சின்ன மருது மற்றும் குறுநில மன்னர்கள் சிலர் இருந்தனர்.

நாம் சிவகங்கையை இழந்து எட்டு ஆண்டுகள் ஆகிவிட்டன' என்று வேலுநாச்சியார் கவலை நிறைந்த குரலில் கூறினார்.

'கவலைப்படாதீர்கள் அரசியாரே! நாம் சிவகங்கையை மீட்கும் நாள் நெருங்கிவிட்டது' என்றார் அமைச்சர் தாண்டவராயர்.

'அந்த இனிய நாளைத்தான் நானும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறேன்' என்றார் வேலுநாச்சியார்.

அப்போது வெளியே பெரும் ஆரவாரம் கேட்டது. 'மைசூரிலிருந்து ஐதர்அலி அனுப்பிய படை வந்துவிட்டது என நினைக்கிறேன்' என்றார் வேலுநாச்சியார்.

'ஐதர்அலி உறுதியாகப் படையை அனுப்புவார் என்று எனக்கு முன்பே தெரியும் அரசியாரே!' என்றார் அமைச்சர் தாண்டவராயர்.

'எதனால் அப்படிச் சொல்கிறீர்கள்?'

'நாம் இருவரும் ஐதர்அலியைச் சந்திக்க மைசூர் சென்றோம் அல்லவா? அப்போது தாங்கள் அவரிடம் உருதுமொழியில் பேசினீர்கள். அப்போது அவர் முகத்தில் பெரிய மகிழ்ச்சி தோன்றியதை நான் கண்டேன்' என்றார் தாண்டவராயர்.

'நம் அரசியாரின் பன்மொழி அறிவு நமக்குப் பெரிய நன்மையைத் தந்திருக்கிறது' என்றார் சின்ன மருது.

ஆம். நமது வீரர்களுடன் ஐதர்அலியின் ஐயாயிரம் குதிரைப்படை வீரர்களும் சேர்ந்து விட்டனர். ஆகவே, நாளை சிவகங்கையை மீட்கப் புறப்படலாம் அல்லவா?‘ என்று கேட்டார் பெரிய மருது.

‘என் கணவர் கொல்லப்பட்ட ஊர் காளையார்கோவில். எனவே, நாம் முதலில் காளையார்கோவிலைக் கைப்பற்றுவோம்: பிறகு சிவகங்கையை மீட்போம்‘ என்றார் வேலு நாச்சியார். அனைவரும் அதனை ஏற்றுக்கொண்டனர். மறுநாள் காளையார்கோவில் நோக்கி வேலுநாச்சியார் படை புறப்பட்டது. ஆண்கள் படைப்பிரிவுக்கு மருது சகோதரர்களும் பெண்கள் படைப்பிரிவுக்குக் குயிலியும் தலைமை ஏற்றனர்.

காளையார்கோவிலில் வேலுநாச்சியாரின் படைக்கும் ஆங்கிலேயரின் படைக்கும் இடையே கடுமையான போர் நடைபெற்றது. இறுதியில் ஆங்கிலேயரின் படை தோற்று ஓடியது.

‘அரசியார் அவர்களே! காளையார்கோவில் நம் கைக்கு வந்து விட்டது. நாம் இப்போதே சிவகங்கைக் கோட்டையைத் தாக்கினால் ஆங்கிலேயரை விரட்டியடித்து விடலாம்‘ என்றார் பெரிய மருது. ‘அவசரம் வேண்டாம். இப்போது சிவகங்கைக் கோட்டைக் கதவுகள் அடைக்கப்பட்டிருக்கும். வரும் விசயதசமித் திருநாள் அன்று கதவுகள் திறக்கப்படும். அப்போது நமது படைகள் உள்ளே நுழையலாம்‘ என்றார் வேலுநாச்சியார்.

‘அப்போதும் பெரிய காவல் இருக்குமே‘ என்றார் சின்ன மருது.

‘விசயதசமி நாளில் கோட்டைக்குள் செல்வதற்குப் பெண்களுக்கு மட்டும் அனுமதி உண்டு. நமது பெண்கள் படைப்பிரிவினர் கூடைகளில் பூக்கள், பழங்கள் ஆகியவற்றுடன் ஆயுதங்களையும் மறைத்துக் கொண்டு கோட்டைக்குள் செல்லட்டும். உள்ளே அவர்கள் தாக்குதலைத் தொடங்கியதும் நமது ஆண்கள் படைப்பிரிவினரும் கோட்டைக்குள் நுழைந்து தாக்கட்டும். ஆங்கிலேயரை விரட்டியடித்து விடலாம்‘ என்றார் வேலுநாச்சியார்.

‘அப்படியே செய்யலாம் அரசியாரே! இன்னும் ஒரு செய்தி. தங்களைக் காட்டிக் கொடுக்குமாறு உடையாள் என்னும் பெண்ணை ஆங்கிலேயர்கள்

வற்புறுத்தினார்களாம். அவர் மறுத்ததால் கொன்றுவிட்டார்களாம். அவருக்கு நாம் உரிய முறையில் சிறப்புச் செய்ய வேண்டும்' என்றார் அமைச்சர் தாண்டவராயர்.

'அவருக்கு ஒரு நடுகல் நடுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள் அமைச்சரே! அவரது பெருமையை எல்லோரும் அறிந்து கொள்ளட்டும்' என்றார் வேலுநாச்சியார்.

'அப்படியே செய்வோம்' என்றார் அமைச்சர்.

விசயதசமிக்கு முதல் நாள் சிவகங்கையை நோக்கிப் புறப்பட்டது படை. வழியில் உடையாளுக்காக நடப்பட்ட நடுகல் முன்பு குதிரையில் இருந்து இறங்கினார் வேலுநாச்சியார். தாம் வைத்திருந்த தாலியை எடுத்து அந்த நடுகல்லுக்குக் காணிக்கையாகச் செலுத்தி வணங்கினார். அருகில் நின்ற வீரர்கள் 'உடையாள் புகழ் ஓங்குக' என்று முழக்கமிட்டனர்.

படை மறுநாள் காலை சிவகங்கையை அடைந்தது.

'அரசியாரே! நான் நமது பெண்கள் படைப்பிரிவுடன் மாறுவேடத்தில் உள்ளே செல்கிறேன். உள்ளே சென்றதும் அங்குள்ள ஆயுதக் கிடங்குக்கு எப்படியாவது தீ வைத்து விடுகிறேன். தீ எரிவது தெரிந்ததும் நம் படை உள்ளே நுழையட்டும்' என்று கூறினார் குயிலி.

'அப்படியே ஆகட்டும்' என்றார் வேலு நாச்சியார்.

குயிலியும் பெண்கள் படையினரும் கோட்டைக்குள் சென்றனர். சிறிது நேரத்தில் கோட்டைக்குள் பெரும் கூச்சல் எழுந்தது. உள்ளே உயரமாகத் தீ எரிவது தெரிந்தது.

'நமது படை உள்ளே நுழையட்டும்' என்று ஆணையிட்டார் வேலுநாச்சியார். படை வீரர்கள் கோட்டைக்குள் பாய்ந்து சென்றனர். ஆங்கிலேயரின் படையுடன் கடுமையாகப் போரிட்டனர். இறுதியில் ஆங்கிலப்படை தோல்வியடைந்து கோட்டையைவிட்டு ஓடியது.

'வெற்றி! வெற்றி!' என்று முழக்கமிட்டனர் வீரர்கள்.

'இந்த வெற்றிக்குக் காரணமான குயிலி எங்கே?' என்று கேட்டார் வேலுநாச்சியார்.

'குயிலி தம் உடலில் தீ வைத்துக் கொண்டு ஆயுதக் கிடங்குக்குள் குதித்துவிட்டார்' என வீரர்கள் கூறினார்கள்.

'குயிலி தம் உயிரைத் தந்து நம்நாட்டை மீட்டுக் கொடுத்திருக்கிறார். அவரது துணிவுக்கும் தியாகத்திற்கும் வீரத்திற்கும் தலைவணங்குகிறேன்' என்று உணர்ச்சிப் பெருக்கோடு கூறினார் வேலுநாச்சியார்.

வேலுநாச்சியாரின் வீரம், மருது சகோதரர்களின் ஆற்றல், ஐதர்அலியின் உதவி ஆகியவற்றோடு குயிலியின் தியாகமும் இணைந்ததால் சிவகங்கை மீட்கப்பட்டது.

**4. தில்லையாடி வள்ளியம்மை**

ஆங்கிலேயரின் அடக்குமுறைக் கொடுமைக்கு எதிராக உரிமைக்குரல் எழுப்பிப் போராடினோர் பலர். அப்போராட்டத்தில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் ஈடுபட்டார்கள். அவர்களுள் குறிப்பிடத் தகுந்தவர் தில்லையாடி வள்ளியம்மை ஆவார்.

**பெற்றோரும் பிறப்பும்**

புதுச்சேரியில் வாழ்ந்த முனுசாமி என்ற நெசவாளி, தில்லையாடி என்னும் ஊரில் பிறந்த மங்களம் என்ற மங்கையை மணந்தார். திருமணத்திற்குப் பின்னர் தில்லையாடியிலேயே அவர்கள் நெசவுத் தொழில் செய்து வாழ்ந்து வந்தார்கள். அந்நாளில், ஆங்கிலேயர் தம் நாட்டுத் துணிகளை இந்தியாவிற்குக் கொண்டு வந்து விற்பனை செய்தனர். இதனால், நம் நாட்டில் உற்பத்தி செய்த துணிகளின் விற்பனை குறைந்தது. நெசவுத்தொழில் பாதிக்கப்பட்டது. அப்பாதிப்புக்கு உட்பட்டவர்களுள் முனுசாமியும் ஒருவர்.

நெசவுத்தொழில் பாதிப்பால் வறுமையில் வாடிய முனுசாமி, தம் மனைவியுடன் வேலைதேடித் தென் ஆப்பிரிக்காவில் குடியேறினார். அங்கு ஜோகன்ஸ்பர்க் என்னும் நகரத்தில் சிறிய அளவில் காய்கறிக் கடை நடத்தினார். இந்நிலையில், 1898ஆம் ஆண்டு முனுசாமி, மங்களம் இணையருக்குப் பெண் குழந்தை ஒன்று பிறந்தது. அக்குழந்தையே வீரமங்கை வள்ளியம்மை ஆவார்.

வள்ளியம்மை தென்னாப்பிரிக்காவில் பிறந்தார். எனினும், இவரின் தாயார் பிறந்த ஊரான தில்லையாடியின் பெயரைக்கொண்டு தில்லையாடி வள்ளியம்மை என்று அழைக்கப்படுகிறார்.

**அறப்போர்**

தென்னாப்பிரிக்க நாட்டின் திருமணப்பதிவுச் சட்டப்படியும், கிறித்தவ மதச் சட்டப்படியும் நடைபெறாத திருமணம் செல்லாது என்று அந்நாட்டு உச்ச நீதிமன்றம் 1913ஆம் ஆண்டு ஒரு தீர்ப்பை வெளியிட்டது. அத்தீர்ப்பு, அங்குக் குடியேறியிருந்த இந்தியர்கள் அனைவருக்கும் எதிராக அமைந்திருந்தது. இதனால், பாதிக்கப்பட்ட இந்தியர்கள் தமது உரிமையை மீட்க அறப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அப்போராட்டத்தினைக் காந்தியடிகள் தலைமை ஏற்று வழிநடத்தினார். போராட்டத்தின்பொழுது காந்தியடிகள் நிகழ்த்திய வீரம் செறிந்த உரை, சிறுமி வள்ளியம்மையின் மனத்தில் ஆழமாகப் பதிந்தது. காந்தியடிகளின் உரிமை முழக்கத்தினால் கவரப்பட்ட வள்ளியம்மை அறப்போராட்டத்தில் முனைப்புடன் பங்கேற்றார். 1913ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 23ஆம் நாள் வால்க்ஸ்ரஸ்ட் என்னும் இடத்தில் நடைபெற்ற அறப்போரில் வள்ளியம்மை கைது செய்யப்பட்டார். அவருக்குத் தென்னாப்பிரிக்க நீதிமன்றம் மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தது.

**சிறைவாழ்க்கை**

சிறையில் வள்ளியம்மைக்குக் கல்லும் மண்ணு ம் கலந்த உணவே தரப்பட்டது. இதனால் அவர் உடல்நலம் பெரிதும் பாதிக்கப்பட்டார். கடுமையான காய்ச்சலுக்கு ஆட்பட்ட அவருக்குப் போதிய மருத்துவம் அளிக்கப்படவில்லை. சிறைச்சாலையில் நோயுடன் உயிருக்குப் போராடிய நிலையில் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

**நாட்டுப்பற்று**

உடல்நலம் குன்றிய நிலையில் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட வள்ளியம்மை, தமது வீட்டில் படுத்த படுக்கையாக இருந்தார். இதனை அறிந்த காந்தியடிகள் வள்ளியம்மையைக் காண வந்தார்; காய்ச்சல் காரணமாக உடல் மெலிந்து நைந்து கிடந்த வள்ளியம்மையின் நிலைகண்டு கண்கலங்கி நின்றார்.

“சிறைத்தண்டனைக்காக நீ வருந்துகிறாயா?”, என்று வள்ளியம்மையிடம் கேட்டார் காந்தியடிகள். உடல்நிலை தளர்ந்திருந்த அந்நிலையிலும் வள்ளியம்மை, “இல்லை இல்லை மீண்டும் சிறை செல்வதற்குத் தயார்” என்று கூறினார். அத்துடன், இந்தியர்களின் நலனுக்காக எத்தகு இன்னல்களையும் ஏற்பேன். அதற்காக, என் இன்னுயிரையும் தருவேன் என்று கூறினார். வள்ளியம்மையின் பதிலைக் கேட்டுக் காந்தியடிகள் உள்ளம் நெகிழ்ந்தார். கொடிய அடக்குமுறைச் சிறைவாசத்திற்கு ஆளாகி நோயின் கடுமையினால், துன்புற்றநிலையிலும் வள்ளியம்மை தமது உரிமைப் போராட்ட உணர்விலிருந்து சிறிதும் மனம் தளரவில்லை. சிறைச்சூழலால் உடல்நலம் குன்றிய வள்ளியம்மை 1914 பிப்ரவரி இருபத்திரண்டாம் நாளன்று தமது பதினாறாம் அகவையில் மரணம் அடைந்தார்.

**காந்தியடிகளின் கருத்து**

’என்னுடைய சகோதரியின் மரணத்தைவிடவும் வள்ளியம்மையின் மரணம் எனக்குப் பேரிடியாக இருந்தது” என்று காந்தியடிகள் மனம் வருந்தினார்.

“மாதர்களுக்கு அணிகலன்களாகத் திகழும் துன்பத்தைத் தாங்கும் மனவலிமை, தன்மானம், நல்லொழுக்கம் ஆகியவற்றிற்கு இலக்கணமாகத் திகழ்ந்தார். அவருடைய தியாகம் வீண் போகாது. சத்தியத்திற்காக உயிர்நீத்த அவருடைய உருவம் என் கண்முன் நிற்கிறது. நம்பிக்கைதான் அவரது ஆயுதம்” என்று தில்லையாடி வள்ளியம்மை குறித்து, இந்தியன் ஒப்பீனியன் இதழில் காந்தியடிகள் எழுதியுள்ளார். தென்னாப்பிரிக்க வரலாற்றில் வள்ளியம்மையின் பெயர் என்றும் நிலைத்து நிற்கும் என்று காந்தியடிகள், தென்னாப்பிரிக்கச் சத்தியாக்கிரகம் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

காந்தியடி கள், தமிழர்மீதும் தமிழ்மொழியின்மீதும் மிகுந்த ஈடுபாடு கொண்டதற்கு வள்ளியம்மையும் ஒரு காரணம் என்று கூறலாம். காந்தியின் வாழ்க்கைப் பயணத்தில், அவர் மேற்கொண்ட சத்தியாக்கிரக வேள்விப்பணிக்கு முதல் களப்பலியாகி, அவரை மகாத்மா என்ற உயர்நிலைநோக்கித் திருப்பிய பெருமை தில்லையாடி வள்ளியம்மைக்கு உண்டு. காந்தியடிகள் தமது தமிழகப் பயணத்தின்போது வாய்ப்புக் கிடைக்கும்பொழுதெல்லாம் வள்ளியம்மையின் யாகத்தை நன்றியுடன் நினைவு கூர்ந்துள்ளார். திருமணமாகாத எம்பெண்ணான

வள்ளியம்மையின் வாழ்வு இந்திய விடுதலைப் போருக்கு முன்னோடியாக அமைந்தது. அவரது அளப்பரிய தியாகம் போற்றி வணங்கத்தக்கது.

**அரசு செய்த சிறப்புகள்**

வள்ளியம்மையின் நினைவைப் போற்றும்வகையில் தில்லையாடியில் தமிழ்நாடு அரசு அவரது சிலையை நிறுவியுள்ளது. கோ–ஆப்– டெக்ஸ் என்றழைக்கப்படும் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் சென்னையிலுள்ள தனது அறுநூறாவது விற்பனை மையத்திற்குத் தில்லையாடி வள்ளியம்மை மாளிகை எனப் பெயர் சூட்டிப் பெருமைப்படுத்தி உள்ளது. தென்னாப்பிரிக்க நாட்டில் இந்தியரின் நலனுக்காகப் போராடிய வீரத் தமிழ் மங்கை தில்லையாடி வள்ளியம்மையின் உரிமை உணர்வை அனைவரும் போற்றுவோம். நாட்டு நலனில் நாட்டங்கொண்டு த ன்னலம் நீக்கிப் பொதுநலம் பேணி வாழ்வோம்.

**5. இராணி மங்கம்மாள்**

தமிழ்நாட்டில் நாயக்கர் மரபில் பெண்கள் முடிசூடி ஆட்சி செய்ததாக வரலாறு இல்லை. ஆனால், காப்பாட்சியாளராக ஆட்சி புரிந்து உள்ளனர். அதற்குச் சிறந்த சான்றாகத் திகழ்ந்தவர்தான் இராணி மங்கம்மாள். அரசுரிமைக்கு உரியவர்கள் குழந்தைகளாக இருந்ததனால், அவர்களுக்குப் பதிலாக இவர் காப்பாட்சியாளராக இருந்து ஆண்டார். மதுரையை ஆண்டுவந்த சொக்கநாத நாயக்கரின் மனைவி இராணி மங்கம்மாள். அக்காலத்தில், கணவன் இறந்தால் மனைவி உடன்கட்டை ஏறுவது வழக்கமாக இருந்தது. இராணி மங்கம்மாளின் கணவர் இறந்தபோது தன்மகன் அரங்க கிருட்டின முத்துவீரப்பன் இளம் வயதினனாக இருந்தான். அவனுக்குத் துணையாக இருக்கவேண்டும் என்னும் கடமையுணர்வினால் இராணி மங்கம்மாள் உடன்கட்டை ஏறவில்லை.

**மகனுக்கு அரசும் அறிவுரையும்**

மங்கம்மாள், தன் மகன் அரங்க கிருட்டின முத்துவீரப்பனுக்குத் திருமணம் செய்வித்த பின்னர் முடிசூட்டினார்.

“அரசாட்சியை அடக்கத்தோடும் தந்திரத்தோடும் நாம் நோக்கவேண்டும்; முன்கோபமும் அதன் விளைவும் அரசியலில் ஒருபோதும் வெற்றியைத் தராது;

பகைவரை எதிர்கொள்ள எப்போதும் ஆயத்த நிலையில் இருப்பதோடு மிகுந்த பொறுமையுடனும் செயல்படவேண்டும்” என்றெல்லாம் மகனுக்கு அறிவுரை கூறினார். எந்த வேளையில் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்றும் துணிந்து முடிவெடுக்கும் மனவலிமை வேண்டுமென்றும் கூறினார். நாட்டையாளும் பொறுப்புக்கு வந்துவிட்டால், அனைவரையும் தம் குழந்தைகள்போல் எண்ணி, அன்பு செலுத்துதல் வேண்டும் என்றும் அறிவுரை பகன்றார்.

முத்துவீரப்பன் அன்னை காட்டிய வழியில் திறமையாக ஆட்சிபுரிந்தான்; தந்தை சொக்கநாதர் இழந்த பகுதிகளைப் போரிட்டு மீட்டான்; கோவில்களைக் கட்டி அறச்செயல்கள் பல செய்தான்; மக்களின் பசிப்பிணியைப்போக்க ஆங்காங்கே சத்திரங்களும் சாவடிகளும் கட்டினான்; நேர்மையைக் காட்டிலும் உயர்ந்த தெய்வம் இல்லை என்னும் உணர்வோடும் நடுவுநிலைமைப் பண்போடும் அமைதியாக ஆட்சி நடத்தி மக்களிடம் நற்பெயர் பெற்றான். ஏழாண்டுக்காலம் ஆட்சி நடத்திய அவன், அம்மைநோய் கண்டு உலக வாழ்வை நீத்தான்.

**மங்கம்மாள் ஆட்சிப்பொறுப்பேற்றல்**

மகன் முத்துவீரப்பனின் இறப்பு இராணி மங்கம்மாளுக்குப் பேரதிர்ச்சியைத் தந்தது. மகன் இறந்த சில நாளில் மருமகள் சின்னமுத்தம்மாள் அழகிய ஆண்மகனைப் பெற்றெடுத்தாள். பெயரன் பிறந்தவுடன் இராணி மங்கம்மாள் குலம் தழைக்க, வழிபிறந்தது எனத் தெய்வத்திற்கு நன்றி செலுத்தினாள். ஆனால், சில நாளில் மருமகள் முத்தம்மாளும் காலமானாள். மறைந்துபோன மகன் – மருமகளின் நினைவுகள்அரண்மனை முழுவதும் நிறைந்து அவரைத் துன்பத்தில் மூழ்கச் செய்தன.

இருப்பினும், அரசியல் பட்டறிவும் ஆட்சிப்பொறுப்பும் இராணி மங்கம்மாளின் மனத்தைக் கல்லாக்கியிருந்தன. மகன் முத்துவீரப்பன் இறந்ததனால், கி.பி. 1688ஆம் ஆண்டு பெயரன் விசயரங்கச் சொக்கநாதன் பெயரளவில் அரியணையில் ஏற்றப்பட்டான். பாட்டி மங்கம்மாள் காப்பாட்சியாளராக ஆட்சிப் பொறுப்பினை ஏற்றார். மங்கம்மாள் துயரங்களைத் தாங்கிக்கொண்டு ஆட்சிக் கடமைகளை அழகுற ஆற்றக்கூடிய வீராங்கனை என மக்கள் போற்றிப் புகழ்ந்தனர்.

**திருவிதாங்கூர்ப் போர்**

திருவிதாங்கூர் மன்னர் இரவிவர்மா, மதுரை நாயக்க அரசுக்குச் செலுத்த வேண்டிய திறைப்பொருள்களைச் செலுத்தவில்லை; கல்குளம் பகுதியிலிருந்த நாயக்கர் படையைத் தாக்கி அழித்தார். எனவே, தளபதி நரசப்பையன் தலைமையில் மங்கம்மாள் அனுப்பிய படை திருவிதாங்கூர்ப் படையைத் தோற்கடித்துத் திறைப்பொருள் மற்றும் பொன், பீரங்கி முதலிய பொருள்களையும் பெற்றுத் திரும்பியது.

**தஞ்சைப் போர்**

தஞ்சையை ஆண்ட மராத்தியருக்கும் மதுரை நாயக்கர்களுக்கும் இடையில் நல்லுறவு நிலவவில்லை. ஒருமுறை தஞ்சை ஷாஜி, மதுரை நாயக்கர் ஆட்சிப்பகுதிகள் சிலவற்றைக் கைப்பற்றிக் கொண்டார். அவற்றை மீட்க, தளபதி நரசப்பையன் தலைமையில் மங்கம்மாள் ஒரு படை அனுப்பினார். அப்படை அப்பகுதிகளை மீட்டுத் தஞ்சையை அச்சுறுத்தியது. தஞ்சை அமைச்சர் பாலாஜி பண்டிதர் படையெடுப்பாளர்களுக்குப் பெரும்பொருள் கொடுத்தனுப்பினார்.

**மைசூர்ப் போர்**

இராணி மங்கம்மாள் காலத்தில் மைசூர் மன்னன் சிக்கதேவராயன் காவிரியின் குறுக்கே அணைகட்டியபோது, மங்கம்மாள் தஞ்சையுடனான பகையை மறந்து, அந்நாட்டு அரசு உதவியுடன் எதிர்ப்புத் தெரிவித்ததோடு அன்றி, மைசூர்மீது படையெடுக்க தஞ்சை-மதுரைக் கூட்டுப்படை ஒன்றனை உருவாக்கினார். படை தயாரானது. ஆனால், இவ்வேளையில் கருநாடகப் பகுதியில் கடும்மழை பெய்ததனால் சிக்கதேவராயன் கட்டிய அணைகள் உடைந்தன; சிக்கல் முடிவடைந்தது.

**சமயக் கொள்கை**

மதுரை நாயக்க மன்னர்களைப்போலவே மங்கம்மாள் சமயப்பொறையைக் கடைப்பிடித்தார்; கிறித்தவ மதக்குருமார்களைச் சமயப் பேருரை ஆற்ற அனுமதித்தார். ஒவ்வொருவரும் தாம் சிறந்ததாகக் கருதும் சமயத்தைக் கைக்கொண்டு வாழவிடுவதே தருமம் என்ற கொள்கையை மங்கம்மாள்

பின்பற்றினார். சமயத் தொடர்பாகச் சிறை வைக்கப்பட்ட மெல்லோ பாதிரியாரை விடுதலை செய்ததோடு போசேத் என்ற குருவைத் தம் அரசவையில் வரவேற்று விருந்தோம்பினார்.

இசுலாமியர்களுக்கும் மங்கம்மாள் மானியம் அளித்துள்ளார். இசுலாமியர்களின் நல்வாழ்விற்காகவும் பள்ளிவாசல்களின் பாதுகாப்பிற்காகவும் நிலங்களை மானியமாக வழங்கியது குறித்துக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

**மங்கம்மாள் அறச்செயல்கள்**

மக்கள் நலம்பேணும் நல்ல பல பணிகளை மங்கம்மாள் செய்துள்ளார். அவர், மதுரையில் பெரியதொரு அன்னச்சத்திரத்தைக் கட்டினார்; புதிய சாலைகள் பல அமைத்தார்; கன்னியாகுமரிக்கும் மதுரைக்கும் இடையே அமைந்த நெடுஞ்சாலை, மங்கம்மாள் சாலை என அழைக்கப்படுகிறது. குதிரைகள், பசுக்கள், காளைகள் முதலியன நீர் அருந்துவதற்கு வசதியாகச் சாலையோரங்களில் தண்ணீர்த் தொட்டிகளைத் திறக்க ஆணையிட்டார்.

பொதுமக்களுக்காகக் குடிநீர்க் குளங்கள், ஊருணிகள், கிணறுகள் ஆகியவற்றைத் தோண்டச் செய்தார். தொழில் வளர்ச்சி, வாணிகம், மக்கள்தொடர்பு ஆகியவற்றிற்கு வழிவகுத்தார். மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்திற்குப் பொன்னும் பொருளும் வழங்கினார்.

ஆனித்திங்களில் ஊஞ்சல் திருவிழா நடைபெற ஏற்பாடு செய்தார். கொள்ளிடத்தில் வெள்ளம் ஏற்பட்டு மக்கள் துன்புற்றபோது அவர்களுக்கு உணவு, உடை, உறையுள் வழங்குவதற்கு ஆணையிட்டார்.

வெள்ளத்தால் அழிந்த கரையோரத்துச் சிற்றூர்களைச் சீரமைத்தார். மத்தியச் சந்தை, மதுரைக் கல்லூரி உயர்நிலைப்பள்ளிக் கட்டடம், இராமநாதபுர மாவட்ட ஆட்சித் தலைவரின் பழைய அலுவலகம் முதலியவற்றை மங்கம்மாள் கட்டியதாகக் கூறுவர்.

**மங்கம்மாள் இறையுணர்வும் பெருந்தன்மையும்**

மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் விழாக்கள் நடைபெறும்பொழுது, இராணி மங்கம்மாள் தமது செங்கோலை அம்மனின் முன்வைத்து வழிபடுவதனை

வழக்கமாகக் கொண்டிருந்தார். சித்திரை முழுமதி நாளில் இராணி மங்கம்மாளும் இளவரசரும் தமுக்கம் அரண்மனையில் தங்கி, மீனாட்சி திருமணத்தைக் கண்டுகளித்தனர். ஆற்றில் இறங்கும் கள்ளழகரின் திருவடிகளை அவர்கள் இருவரும் வணங்கி மகிழ்வர்.

ஒருமுறை பழனி முருகனை வணங்க மங்கம்மாள் மலை ஏறிக்கொண்டிருந்தபோது, முருகனை வழிபட்டுத் திரும்பிய இளைஞன் ஒருவன், தன்னை மறந்த நிலையில் இராணியை மோதிவிடுவதுபோல் அருகில் வந்தான். மங்கம்மாளின் மெய்க்காவலர்கள் அவனைத் தண்டிக்க ஆயத்தம் ஆனார்கள். அவ்வேளையில் இராணி மங்கம்மாள் "இளைஞன் வேண்டுமென்றே தவறு செய்யவில்லை; பக்தி உணர்வில் தன்னை மறந்து கீழே இறங்கி வரும்பொழுது, நான் எதிரே வருவதனைக் கவனிக்கத் தவறிவிட்டான். இறைவனுக்கு முன்னால் ஏற்றத்தாழ்வுகள் இல்லை; அனைவரும் ஒன்றே. அவனை அவன் வழியில் போக விடுங்கள்" என்று பெருந்தன்மையோடு கூறினார்.

மங்கம்மாள் திறமையான ஆட்சியாளர்; எதிர்ப்புகளைத் தன் ஆற்றலாலும் அறிவு நுட்பத்தாலும் முறியடித்து வெற்றி நடைபோட்டவர்; துன்பங்கள் நம்மைச் செம்மைப்படுத்தி வளர்ப்பதற்கும், இன்பங்கள் நமக்கு விழிப்பூட்டுவதற்கும் வருவன என்பதனை உணர்ந்தவர்; தென்னாட்டைத் தன்னந்தனியே ஆண்ட பெண்ணரசி என்னும் புகழைப் பெற்றவர்; நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் கொண்டவர். மக்கள் நலம் நாடுவோர் பட்டியலில் மங்கம்மாளின் பெயர் மங்காத புகழோடு விளங்கும் என்பதில் ஐயமில்லை.

### 6. அன்னி பெசன்ட் அம்மையார்

| | |
|---|---|
| பெயர் | அன்னிபெசணட் அம்மையார் |
| இயற்பெயர் | அன்னி உட் |
| பிறப்பு | லண்டன் |
| காலம் | 1847 ௫ 1933 |

லண்டன் ஐரிஷ் குடும்பத்தில் பிறந்தவர்.

பெற்றோர் இவருக்கு இட்டபெயர் அன்னி உட். திருமணத்திற்கு பிறகு திருமதி அன்னிபெசண்டு என்று அழைக்கப்பட்டார்.

1893-ல் பிரம்மஞான சபைப் பணிக்காக (Theosophical Society) இந்தியா வந்தார்.

17.09.1875-ல் எச்.பி. பிளாவட்சி என்ற ரஷிய அம்மையாரும் கர்னல் எச்.எ. ஆல்காட் என்ற அமெரிக்கரும் சேர்ந்து அமெரிக்காவில் நியூயார்க நகரில் துவக்கிய அமைப்பே பிரம்ம ஞானசபை ஆகும்.

இருவரும் இந்தியா வந்து சபையின் நோக்கத்தை நிறைவேற்றினார்.

**பிரம்மஞானசபையின் நோக்கங்கள்**

1. உலக சகோதரத்துவத்தை மையமாகக் கொண்டு செயல்படல்.
2. உலக சமயங்கள், தந்துவங்கள், அறிவியல்களை ஒப்பிட்டு ஆய்வது.
3. மனிதரிடையே மறைந்து கிடக்கும் இயற்கை நியதிகளை கண்டறிதல்.

சென்னை அடையாரில் பிரம்மஞான சபையின் தலைமை பீடத்தை அமத்தனர். ஆல்காட் 1907இல் இறந்த பின் 1907 அன்னிபெசண்ட் அம்மையார் அதன் தலைவரானார்.

1907 முதல் 1933 வரை பிரம்மஞான சபையின் தலைவராக இருந்தார்.

சென்னை அடையாறு இவர்தம் பணிக்கு உரிய இடமாகத் திகழ்ந்தது.

தேசிய இயக்கத்திற்கு உறுதுணையாக இருந்தார்.

நியூ இந்தியா என்ற நாளிதழை நடத்தினார்.

“நியூ இந்தியா இதழைப் பின்பற்றியே தமிழ் இதழ்கள் நடத்த நான் தூண்டப்பட்டேன்” என்று கூறியுள்ளார்.

காந்தியடிகளுக்கு முன்பு வரை இந்திய அரசியலில் பெருஞ்செல்வாக்கு பெற்றிருந்த தலைவர் அன்னிபெசனட் ஆவார்.

இவர் ஓம்ரூல் (Home Rule) என்னும் தன்னாட்சி இயக்கத்தை தொடங்கினார்.

திலகருடன் சேர்ந்து பணியாற்றினார்.

1917-ல் கல்கத்தாவில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார்.

காங்கிரஸ் மாநாட்டிற்கு தலைமை வகித்த முதல் பெண்மணி இவரே ஆவார்.

காந்தியடிகள் அரசியில் தலமையை ஏற்ற பிறகு இவர் சமூகப் பணியில் அதிக கவனம் செலுத்தினார்.

சாரணர் இயக்கத்தை (Scout Movement) இந்தியாவில் பரப்பினார்.

கல்வித் தொண்டு செய்தார்.

இவர் காசியில் தொடங்கி பள்ளிதான் பிற்காலத்தில் காசி இந்து பல்கலைக்கழுமாக மாறிற்று.

இரவீந்திரநாத் தாகூரின் ஆதரவுடன் சென்னையில் தேசிய பல்கலைக் கழகம் ஒன்றைச் சில ஆண்டுகள் நடத்தினார்.

இந்து சமயத்தின் மீது பெரும் மதிப்பு கொண்டவர். “இந்து சமயம் சிறந்த முறையில் பேணப்படாவிட்டால் இந்தியாவிற்கு எதிர்காலம் கிடையாது என்று சொன்னவர்.

இந்திய மகளிர் சங்கத்தை நிறுவியர்.

இளமைத் திருமணத்தைத் எதிர்த்தார். பெண்கள் உரிமைக்கும் பெண்கள் மறுமணத்தையும் ஆதரித்தார்.

வாழ்நாள் முழுவதும் இந்தியாவின் மேம்பாட்டிற்கும் பெண் விடுதலைக்கும் பாடுபட்டவர்.

பிரம்மஞான சபை இந்து கலாச்சாரத்தையும், சமுதாயச் சீர்திருத்தத்தின் அவசியத்தையும், அனைத்து துறைகளின் முன்னேற்றத்தையும் வலியுறுத்தியதன் விளைவாக இந்திய தேசியம் துளிர்விட்டு வளர வழி வகுத்தது” என்றார் ஆர்.சத்தியநாதையர்.